1979-3-29

உகண்டா
அதிபர்

# இடி அமீனுக்கு ஆபத்து!

## மேற்கு மாகாணம் புரட்சிப்படை வசமானது

(லண்டன்)

உகண்டாவில் அதிபர் இடி அமீனுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதென்றும், உகண்டா நிலைமை இடி அமீனுக்கு சாதகமாக இல்லை என்றும் உகண்டா தலைநகர் கம்பாலாவிலிருந்து வெளியான கிடைச் செய்திகள் நேற்றிரவு தெரிவித்தன.

முன்னேறிச் செல்லும் புரட்சிப் படைகள், கம்பாலாவின் மேற்கு மாகாணத்தை நேற்று கைப்பற்றி விட்டதாக உகண்டா வானொலி அறிவித்துள்ளது. இந்த மாகாணத்துடனான சகல தொடர்புகளும் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன என்றும் உகண்டா வானொலி அறிவித்தது.

இதற்கிடையே நேற்று எண்டபி விமான நிலையத்திலும், கம்பாலாவிலும் குண்டுகள் வெடித்துள்ளன.

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No. QB/39-5/78

மலர் 21 பங்குனி 15 ரபி-ஆகி 29 இதழ்: 46
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 29-3-79

## சிங்களத்தில் வரும் கடிதம்: கா. பொ. கேள்வி எழுப்புவார்

(கொழும்பு)

அரச திணைக்களங்களிலிருந்து அனுப்பப்படும் கடிதங்களும் வெளியீடுகளும் சிங்களத்திலேயே தொடர்ந்தும் வெளிவருவதாகப் புகார் தெரிவித்து மூன்று கேள்விகளைப் பாராளுமன்றத்தில் கேட்பதற்கு ஊர்காவற்றுறை எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு, புடவைக் கைத்தொழில் அமைச்சு ஆகியவற்றிலிருந்து தமக்கு கிடைத்த கடிதங்கள் தொடர்பாகவும், அஞ்சல் தொலைத் தொடர்புத் திணைக்களம் வெளியிட்ட தபால் கட்டைப் படிவம் ஆகியன தொடர்பாக திரு. இரத்தினம் சம்பந்தப்பட்ட மூன்று அமைச்சர்களிடமும் இவ்வினவை அடுத்தமாதம் 5-ந் திகதி கேட்பார். (ம)

# மன்னாரில் மீண்டும் எண்ணெ அகழ்வு வேலை!

(மன்னார்)

**மன்னாரில் மீண்டும் எண்ணெ அகழ்வு வேலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இது சம்பந்தமான புதிய ஒப்பந்தமொன்று நேற்று இலங்கை அரசாங்கத்துக்கும், நோர்வே அரசாங்கத்திற்குமிடையே கைச்சாத்திடப்பட்டது**

நோர்வே அரசாங்க எண்ணெ நிறுவனத்துக்கும் இலங்கை அரசுக்குமிடையே கைச்சாத்தாகி புதிய உடன்படிக்கையின் மூலம், மன்னாரில் நிலத்துக்கு அடியிலும் கடலுக்கு அடியிலும் விரைவில் எண்ணெ அகழ்வு வேலை ஆரம்பமாகவிருக்கிறது.

இது சம்பந்தமாக நோர்வே நிபுணர்கள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது. பூர்வாங்க வேலைகளை இந்தக்குழுவினர் ஆரம்பித்து வைப்பார்கள்.

## விமானக் கட்டணமும் உயரலாம்

ஜெனிவா, மார்ச் 28

எண்ணெ விலையை அதிகரிப்பதென்று எண்ணெ உற்பத்தி, ஏற்றுமதி நாடுகள் தீர்மானித்ததற்கிணங்க, விமானக் கட்டணங்களை அதிகரிப்பது பற்றி சர்வதேச விமானக் கம்பெனிகள் இப்பொழுது ஆலோசனை நடத்தி வருகின்றன.

## காங்கிரஸ் வழக்கு

(யாழ்ப்பாணம்)

காங்கிரஸ் வழக்கு ஏப்ரல் மாதம் 6-ம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

### உள்ளூராட்சித் தேர்தல்:

## ம. விடுதலை முன்னணிக்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

"அண்மையில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு தகைமை பெற்றுள்ள கட்சியாக மக்கள் விடுதலை முன்னணியை ஏற்றுக் கொள்ள தேர்தல் ஆணையாளர் திணைக்களம் மறுத்துவிட்டது. ஐக்கிய முன்னணி முதலாளித்துவ அரசினால் சட்ட விரோதமாக்கப்பட்ட கால கட்டத்தில் இம் முன்னணி பெரும் கஷ்டத்துடன் இயங்கியது பன்னிரண்டு வருடங்களாக இயங்கும் இந்த முன்னணியை அங்கீகரிக்க மறுத்து அநீதியான செயலாகும்".

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி பொதுச்செயலாளர் திரு. வன்னியாராய்ச்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது!

"அங்கீகரிக்கப்பட்ட ஒரு கட்சியாக ஏற்றுக்கொள்ள மறுப்பது, நாட்டிலுள்ள பல்லாயிரக் கணக்கான பாட்டாளிகள் உட்பட கஷ்டப்படும் பொதுமக்களின் மதிப்பைப் பெற்றுள்ள, மக்களின் முடியுரிமையை மேஜாக மதிக்கும் ஏழை பாட்டாளி மக்களின், சோஷலிச கட்சியின் அடிப்படை உரிமையைப் பறிப்பதாக உள்ளது.

"இந்தக் காரணத்தினால் உள்ளூராட்சி தேர்தலில் நாட்டின் பல பகுதிகளிலும் போட்டியிடுவதற்கு மக்கள் விடுதலை முன்னணி வேட்பாளர்கள் லட்சக்கணக்கான ரூபாய்களை பிணைப்பணமாக செலுத்த வேண்டியுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட முதலாளித்துவ, சிறு முதலாளித்துவ அரசியல் கட்சிகளுக்கு இல்லாத தடையும் அநீதியும், இதனால் மக்கள் விடுதலை முன்னணிக்கு ஏற்பட்டுள்ளது". (கு)

## அரசியல் வியாபாரமாக இருக்கக் கூடாது!

### எம். ஜி. ஆர். கூறுகிறார்

சென்னை, மார்ச். 28

அரசியல் வியாபாரமாக இருக்கக்கூடாது. அது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படும்கருவியாகவே இருக்கவேண்டும்.

இவ்வாறு சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில்பேசுகையில் தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் குறிப்பிட்டார்.

சட்டவிரோதமான செயல்களையும், வன்முறைகளையும் தமிழகஅரசு ஒருபோதும் அனுமதிக்காதென்றும் திரு. இராமச்சந்திரன் எதிர்க்கட்சிகளுக்கு எச்சரிக்கை விடுத்தார். (இ)

## "விலைப்பட்டியல் இன்றேல் கடும் நடவடிக்கை"

(சுன்னாகம்)

பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்திற்கமைய கூட்டுறவுக் கடைகளிலும் தனியார் வர்த்தக நிலையங்களிலும் பொருட்களின் விலைப்பட்டியல் பாவனையாளர்கள் பார்க்கக் கூடிய வகையில் தொங்கவிடப்படல் வேண்டும். இந்த விதிமுறையை மீறும் எந்த ஒரு வியாபாரியும் அரசின் புதிய பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் சட்ட நடவடிக்கை மேற்கொண்டு தண்டிக்கப்படுவர்

இவ்வாறு விலைக்கட்டுப்பாட்டதிகாரி திரு மு சிவபாதசுந்தரம் சுன்னாகம் சிவப்பிரகாசமகாவித்தியாலயத்தில் வலி-மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு மு சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

வலி-மேற்குப் பகுதியில் உள்ள வர்த்தகர்கள் சங்கானை ப நோ கூ சங்க நுகர்ச்சிப் பகுதி முகாமையாளர் திரு எஸ் சுப்பிரமணியம் மற்றும் சங்கப் பிரதிநிதிகளும் பங்குபற்றினர்

திரு மு சிவபாதசுந்தரம் "விலைப்பட்டியலும் அதன் முக்கியத்துவமும்" என்னும் பொருள்பற்றி மேலும் கூறியதாவது;

பொதுமக்கள் வியாபாரிகளால் சுரண்டப்படுவது நாட்டில் சாதாரணவழக்கமாகிவிட்டது. அதிலும் தட்டுப்பாடு ஏற்படும் பொருட்களில் பாவனையாளர் ஈவிரக்கமின்றி சுரண்டப்படுவது எப்பகுதியிலும்சம்பிரதாயமாகிவிட்டது. எனவேதான் இதனையறிந்த அரசாங்கம் பொதுமக்களை சுரண்டல்பேர்வழியான வர்த்தகர்களிடமிருந்து விடுவிப்பதற்கு பொருட்களின் விலைப்பட்டியலை எவரும் பார்க்கும் வகையில் கடையின் முன்பதாக தொங்கவிடப்படல்வேண்டும் இதனை மீறுவோர் மீது துரித சட்ட நடவடிக்கை மேற்கொள்ள அரசு நாடு பூராவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது இதனை உணர்ந்து வர்த்தகர்கள் நடப்பார்களேயானால் பெரும்பயன் பெறுவர்".

# 'எனக்குபதவி ஆசைஇல்லை; தொகுதி அபிவிருத்தியே முக்கியம்'

### மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் 'கனகர்' அறிக்கை

(மட்டக்களப்பு)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் பொதுவான கொள்கைகளும், நடவடிக்கைகளும் கிழக்கு மாகாணத்திற்கு குறிப்பாக எனதுபொத்துவில்தொகுதிக்குப் பொருத்தமற்றதெனக் கருதியதாலேயே நான் தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து விலகினேன் என்று பொத்துவில் எம். பியும் மட்டக்களப்பு மாவட்ட அமைச்சருமான திரு எம். கனகரத்தினம் விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டம்வாழ் 64 ஆயிரம் தமிழ் மக்களுக்கு பாரபட்சமற்றமுறையில் அரசு அபிவிருத்தித் திட்டங்களில் பங்கு கிடைக்கவேண்டுமென்ற நம்பிக்கையில் எனது பொத்துவில் தொகுதி மக்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கு இணங்க நான் ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனவின் தார்மீக அரசில் அங்கம்வகிக்க முடிவு செய்தேன்

நான் இந்த முடிவை எடுத்து நீண்டநாட்களின்பின்னரேயே மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டேன்.

இதுவும் அரசியல் வற்புறுத்தலினாலும் பொத்துவில் தொகுதி மக்களின் வேண்டுகோளின் பேரிலும் மட்டக்களப்பு மாவட்ட எம். பி.க்களின் தனிப்பட்ட வேண்டுகோளின் பேரிலுமே மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டேன்.

நான் பதவிகளைக்கோரியோ பதவிகளை எதிர்பார்த்துமண்டியிட்டோ நிற்கவில்லை. மட்டக்களப்பு மாவட்டமும் அதைச் சார்ந்த எனது தொகுதியும் மக்களும் அபிவிருத்தியடைய வேண்டுமென்ற நோக்கத்தை விட எனக்கு வேறுகருத்துக்கள் கிடையாது என்பது எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்திற்குத் தெரியும் அப்படித் தெரிந்திருந்தும் என்னைப்பற்றிய அபாண்டமான கூற்றை அவர் தெரிவித்திருப்பது ஆச்சரியத்தையும் மனவருத்தத்தையும் தருகிறது.

## வரி விளம்பரம்

### தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு வேலை பழகியவர்களும், வேலை பழகுபவர்களும் தேவை. வேலைக்கேற்ற நல்ல சம்பளம் கொடுக்கப்படும். நேரில் வரவும், சேவி கிளாஸ் அன் மெற்றல் வேக்ஸ், நீர்வேலி. 1985

அலுமினியம் தொழிற்சாலைக்கு ஸ்பின்னிங் (Spinning) வேலையில் நன்கு அனுபவமுள்ள ஆட்கள் தேவை. அனஸ் அன் கோ., நீர் 1, நியூ மார்க்கட், யாழ்ப்பாணம். 2008

விற்பனையாளராகப் பணிபுரிய 17 வயதிற்குட்பட்ட படித்த பையன் தேவை. நற்சான்றுப் பத்திரத்துடன் தொடர்பு கொள்ளவும். ஞானசுரபி புத்தகக் கம்பனி, 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 2010

நல்ல நிலையிலுள்ள "நியூ ரெமிங்டன்" தமிழ் தட்டச்சு இயந்திரமொன்று தேவை. வைத்திருப்பவர் தொடர்பு கொள்ளவும். ஏ. என். ராமச்சந்திரன், சட்டத்தரணி, கோட் ரோட், பருத்தித்துறை. 2020

### கரைதுறைப்பற்று ப. நோ.கூ. சங்கம், முல்லைத்தீவு

## வெற்றிடம்

பொதுமுகாமையாளர் தரம் 111

மேற்படி பதவிக்கான விண்ணப்பம் இலங்கை வாசிகளிடமிருந்து கோரப்படுகிறது. விண்ணப்பங்கள் அண்மையிற் பெற்ற இரண்டுநற் சான்றிதழ் பிரதிகளுடன் 12-4-79க்கு முன்னதாகத் "தலைவர், ப. நோ. கூ. சங்கம், முல்லைத்தீவு" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படவேண்டும். தபால் மேலுறையின் இடது பக்க மூலையில் "விண்ணப்பம்- பொதுமுகாமையாளர் தரம் 111" எனக் குறிப்பிட வேண்டும்.

தகமைகள்

1. கூட்டுறவுப் பயிற்சிபெற்ற பட்டதாரி.
2. 3 வருட கால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர்தர தராதரப் பத்திரம்.
3. 5 வருட கால அனுபவம் பொருந்திய முன்னைநாள் கூட்டுறவுப் பரிசோதகர் அல்லது,
4. ரூபா 20,00,000 பிணை வருடாந்த மொத்த விற்பனை வாகவெரண்ட வியாபாரத் தாபனமொன்றின் மேல் முகாமைப் பதவி ஒன்றில் 3 வருடகால அனுபவமுடைய ஒருவர்
5. காசுப்பிணை 2000/-ம், காணிப்பிணை 5000/-ம் கட்டப்படவேண்டும்.

வயது:
23 க்கும் 50க்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

வேதனம்:
340-590

19/10, 16/5

(உரிய விசேட படிகள் வழங்கப்படும்)

மேற்கொண்டு விபரம் தேவைப்படின், 12-5-72 திகதிய 5009/6/1 2 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

தலைவர்
கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம்
முல்லைத்தீவு. 2022

### பயிற்சி

ஆங்கிலம் சிறந்த சுலபமான முறையில் திரு. வ. பொன்னம்பலம் M. A. நடாத்துவார். உடன் தொடர்பு கொள்ளவும், NATIONAL INSTITUTES, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 1959

### பசளைக் களஞ்சியம் அமைப்பதற்கான கேள்விப்பத்திரம் கோருதல்

இடம்: முழங்காவில்.

தகுதி: கட்டிட நிர்மாண வேலைகளில் அனுபவமுள்ளவர்கள்.

கேள்விப்பத்திரங்கள் வழங்குதல்: 19 04-79 பகல் 12 மணிக்கு முன்.

கேள்விப்பத்திரங்கள் ஏற்றல்: 20-04-79 காலை 9-30 மணிவரை.

கேள்விப்பத்திரங்களை ரூபா 10/- வைப்புப்பணம் கட்டி கமநலச்சேவை இலாகா, யாழ்ப்பாணச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

க. பரமலிங்கம்
உதவி ஆணையாளர்,
கமநலச்சேவை இலாகா,
2023 யாழ்ப்பாணம்.

## கேள்வி விளம்பரம்

### மாந்தை தெற்கு கிராமசபை, உயிலங்குளம்.

1979-ம் ஆண்டு சித்திரை மாதம் 10-ந் திகதி 10-4-79 முற்பகல் 10-30 மணி வரை கீழ்க்காணும் வேலைகளுக்குச் சீல் வைத்த கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 9-4-79 முற்பகல் 10-00 மணி வரை அலுவலக நேரத்தில் கேள்விப் பத்திரப் பணம் ரூபா 25-00ம், கேள்வி வைப்புப் பணமாக ரூபா 25-00ம் செலுத்திய தின் பேரில் வழங்கப்படும். மேலும் விபரங்களை கிராம சபை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

1. உயிலங்குளம் வீடு கட்டும் திட்ட வேலை.
2. உற்றுவா யன்குளம் ரோட்டு வேலை.

எஸ். பாலசிங்கம்,
விசேட ஆணையாளர்,
மா. தெ. கி. ச.
விசேட ஆணையாளர்
அலுவலகம்,
மாந்தை தெற்கு கிராமசபை,
உயிலங்குளம்,
23-3-79. 2027

## ருவிஸ்ற் நஸீர்

### நன்றி தெரிவிக்கிறர்

[யாழ்ப்பாணம்]

யாழ் ஜின்னாமைதானத்தில் தொடர்ந்து 116 மணித்தியாலங்கள் 'ருவிஸ்ற்' நடனமாடி யாழ்ப்பாணத்தில் ஒரு சாதனையை நிலைநாட்டிய ஜனாப் பரீத் நசீர் யாழ். குடாநாட்டிலும் இலங்கையின் இதர பாகங்களிலும் இருந்து வருகை தந்து இவ் வைபவத்தில் கலந்து ஆதரவளித்த 'ருவிஸ்ற்' நடன நிர்வாக ஸ்தாபகர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மதத்தலைவர்கள், வைத்திய கலாநிதிகள், ரோட்டரி லயன்ஸ் கழகத்தினர் பொலிஸ் அதிகாரிகள், கலைஞர்கள் வெளிநாட்டுத்தூதுவர்கள் பத்திரிகையாளர்களுக்கு தமது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வெகுவிரைவில் மீண்டும் ருவிற் நடனமாடி உலக சாதனையை நிலைநாட்டப் போவ அவர்தாகவெளியிட்டுள்ள ஒரு பிரசுரத்தில் தெரிவித்துள்ளார். [கொக்-அ]

## தவக்கால நற்சிந்தனை

"உன் சத்துருக்களுக்கு முன்பாக நீ முறியடிக்கப்படும்படி கர்த்தர் செய்வார். ஒரு வழியால் அவர்களுக்கு எதிராகப் புறப்படுவாய். ஏழு வழியாய் அவர்களுக்கு முன்பாக ஓடிப் போவாய்: நீ பூமியிலுள்ள எல்லா இராஜ்யங்களிலும் சிதறுண்டு போவாய்.

உன்பிணம் ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும், அவைகளை விரட்டுவோரில்லாதிருப்பீர்கள்".

(உபாகமம், 28-25-26)

கேட்டீர்களா, இனிநாம் என்ன செய்யப்போகிறோம். ஐயோ நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறதே. பரிசுத்தப்படாத நம் உடல் ஆகாயத்தில் தூக்கி எறியப்பட்டு சின்ன பின்னமாக்கப்படுமாம்! எந்தநாட்டிலும் நாம் தலைகாட்ட முடியாதாமே. நாம் என்ன செய்வோம்? இன்றையிலிருந்தே அந்தப் பரிசுத்தப் பாதையை நோக்கி ஒரு நடைபோடவேண்டாமா! பரிசுத்தம்! பரிசுத்தம்! அதுவே நமது வாழ்க்கையில் பாதுகாப்புக் கேடயமாக இருக்கட்டும்.

—ஞானஒளி;

தொகுப்பு : வில்பிறெட்

# யாழ். கச்சேரி

## தமிழைப்புறக்கணிக்கிறது

### பண்டிதர்அரசாங்க அதிபருக்குத்தந்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கச்சேரி தமிழைப் புறக்கணித்து ஆங்கிலத்தை அரசாங்க மொழியாகப் பாவித்து வருவது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்பதை மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இ.போ.ச. உட்பட தமிழ்ப் பகுதியில் உள்ள அரசாங்க அலுவலகங்கள் தமிழ்மக்களுடனும் எம். பிக்களுடனும் பெரும்பாலும் ஆங்கிலத்துடனேயே தொடர்பு கொண்டு வருகின்றன. இதுஅரசியல் அமைப்புச் சட்டத்தை மீறும் செயலாகும்.

இவ்வாறு கூறும் அவசரத் தந்தி ஒன்றைஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணாண்டோவுக்கு அனுப்பி உள்ளார்.

இந்நிலையில் தமிழ்ப்பகுதிகளில் அரசாங்க அலுவலகங்களில் தமிழுக்கு உரிய இடத்தைக் கொடுக்க பெரிய பேராட்டம் ஒன்றை நடத்த வேண்டியேற்படும் என்று பண்டிதர் இரத்தினம் நமது நிருபரிடம் தெரிவித்தார். (இ)

## இன்றைய பலன்

பங்குனிமாதம் 15-ம் திகதி

(29-3-1979)

வியாழக்கிழமை

மேடம்: புண்ணிய விருப்பு தலைதூக்கும். பொருள்வரவு திருப்திகரமாக இருக்கும். குடும்பத்திலும் மகிழ்ச்சியுண்டு.

இடபம்: இருள் மட்டிக் கிடக்கும். ஏமாற்றம் தாக்கும். உடல்நலமும் பாதிக்கப்படலாம். சுகாதாரம் வேண்டும்.

மிதுனம்: தகுதியில் முன்னேற்றமுண்டு. தரமான வாழ்வும் கிட்டும். மாதரு வழிப்பெருமையும் உண்டு.

கடகம்: நல்லகாரியங்களை ஆரம்பிப்பதற்குஇன்று பொன்னான நாள். தொழில்புரியும் இடத்தில், செல்வாக்கும் பெருகும். புத்திரசுகமும் உண்டு.

சிங்கம்: மனதில் அமைதி குன்றும். எதிரிகள் எக்காளமிடுவர். மறைந்த நினைவுகள் தலைதூக்கும். அமைதியே நன்று.

கன்னி: வாழ்க்கையில் பசுமை தோன்றும்" ஸ்திர வழியாலும் பொருள்வரவுக் கிடமுண்டு. பெற்றோர் ஆதரவும் கிடைக்கும்.

துலாம்: குடும்பத்தில் பிரச்னைகள் உருவாகும். தொழில்துறையிலும் மந்த நிலைகாணப்படும் முன்னேற்றத்திலும் முட்டுக்கட்டை தோன்றும்.

விருச்சிகம்: பெரியோர்களின் உதவிகிடைக்கும் உற்சாகம் பெருகும் நினைத்ததைச் சாதிப்பதில் முன்னணியில் நிற்பீர்கள்.

தனுசு: கடமையில் முன்னேற்றம் உண்டு. இடமாற்றமும் வியாபார விருத்தியுமுண்டு.

மகரம்: சிலருக்குப் புதிய வாய்ப்பும் உண்டு. புத்திரரின் நடவடிக்கை மகிழ்ச்சியைத் தரும். எதிர்பாராதவரவுக்கும் இடமுண்டு.

கும்பம்: சிறிவலும் கோபம் உங்களை நிலைதடுமாற வைக்கும் தாவிய நஷ்டத்திற்கும் இடமுண்டு. அடக்கம் அவசியம்.

மீனம்: தாக்கமனப்பான்மை உருவாகும். குறுக்குவழியை நாடுவீர்கள். அவப்பெயருக்கும் இடமுண்டு. பொறுமை நன்று.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ. இல MB 6791

1. இறந்த கந்தையா பரஞ்சோதி, 5 கைலாசப்பிள்ளையார் கோவில் லேன், நல்லூர், யாழ்ப்பாணம்.
வழக்காளி
2. கந்தையா பரஞ்சோதி கைம்பெண் வள்ளியம்மை 5 கைலாசப்பிள்ளையார் கோவில் லேன், நல்லூர், யாழ்ப்பாணம்.
பதில் வழக்காளி

எதிராக வாதிகள்.

1. செல்லப்பா கனகரத்தினமும் பெண் [illegible].
2. கனகம்மாவும், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். தற்போது மலேசியாவில்இருக்கும் இவர்களின் தத்துவகாரன் எஸ். நடராசா, இளைப்பாறிய பயிர்ச்சி கல்லூரி அதிபர், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
3. செல்லப்பா ஆறுமுகம், கொக்குவில் கிழக்கு கொக்குவில்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் ஈடு வழக்கு 6791 (MB 6791)ல் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1979ம் வருடம் சித்திரை மாதம் 18-ம் திகதி (18-4-79) புதன்கிழமை காலை 10 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 8150/-ம் 7-7-1964 தொடக்கம் 23-5-70 வரைக்கும் ரூபா 5000/-க்கு வருடம் நூற்றுக்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகையும் இறுபடும் வரைக்கும் வருடம் நூற்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 770-ம் சதம் 95ம் மேலும் பதில் வழக்காளியாக சேர்க்கப்பட்டதற்கு ஏற்பட்ட முத்திரைச் செலவு ரூபா 48ம் சதம் 75ம்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி, நல்லூர்க் கோவிற்பற்று கொக்குவில் கிழக்கு இறை "கூத்திபோடையும் குட்டிபோடையும்" பரப்பு நிலஇலாச்சம் நாலேகால் (பர. நில. இலா $4\frac{1}{4}$) வடக்குப் பக்கமாக, கிணறும் செய்பயிர் வான்பயிரும் இந்த பரப்பு நாலேகாலுக்கும் எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு வைரவப்பிள்ளை அன்னலிங்கத்தின் ஆதனம் தெற்கு மிகுதி ஆதனம் இதடங்கலும் (பதிவு டி 258/199).

அ. சிவானந்தன்.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்;
"நித்தியகல்யாணி"
பலாலிரோட், திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம் 19-3-79. 2021

உ

## திருமண அழைப்பு

நிகழும் காலயுத்தி வருடம் பங்குனி மாதம் 16-ந் திகதி (30-3-79) வெள்ளிக்கிழமை காலை 7 மணி 15 நிமிஷம் தொடக்கம் 8 மணி 15 நிமிஷம் வரையும் உள்ள மேடலக்கின சுப வேளையில்

| | |
|---|---|
| எமது புதல்வன் **பேரம்பலம்** அவர்களுக்கும் | அவ்வூர் சதாசிவம் புதல்வி **விமலாதேவிக்கும்** |

நீர்வேலி வாய்க்காற்தரவைப் பிள்ளையார் கோவில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் எல்லோரும் வருகை தந்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

இப்படிக்கு
க. கந்தையாவும் பாரியாரும்,
நீர்வேலி வடக்கு.

2025

# "சிவகுமாரன் ஒருலட்சியவாதி, கொள்கைவீரன் இளைஞர் தலைவன், தமிழ்த்தியாகி"

## பத்திரிகையாளரிடம் இளைஞர்கள் தெரிவித்த கருத்து

— கா. யோகநர்தன் —

பருத்தித்துறை வாடிவீட்டிலிருந்து புறப்பட்டு, உரும்பராய் நோக்கிச் சென்றுகொண்டிருந்தோம். பத்திரிகையாளர் குழுவிற்குப் பொறுப்பாகவுள்ள தகவல் அதிகாரி திரு. ஜி ரி. விக்கிரமசிங்கா ஒரு குஷியானபேர்வழி சுற்றுலாவின்போது சகலரையும் உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தவர் அவர்தான்.

பாட்டுடன் நிறுத்திவிடமாட்டார். 'பைலா' ஆடத் தொடங்கி விடுவார். அவருடன் மற்றும் சிலரும் சேர்ந்து விடுவார்கள். பின் கேட்கவா வேண்டும். திடீர் கவிதைகள் புனைந்து பாடத் தொடங்கிவிடுவார்கள். எங்களுடன் வந்த பெண் பத்திரிகையாளர்களான செல்வி அமரஸிங்கம், செல்வி லாரா ஹெஸ்கத் இருவரும் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்தார்கள். செல்வி ஹெஸ்கத் ஒரு வெளிவீட்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர். எல்லாருடனும் இனிமையாகப் பழகுவார். ஒரு இடதுசை எழுத்தாளர். காலியில் வசிப்பவர். செல்வி அமரஸிங்கம் 'ரிபியூன்' பத்திரிகையைச் சேர்ந்தவர். இவர்கள் இருவரும் முன்னுக்கு இருந்தபடியால் பாட்டும் கூத்தும் அவர்களுக்கு எவ்வித அசௌகரியத்தையும் கொடுக்கவில்லை. அவர்கள் ஆடிக்கொண்டிருந்தார்கள். பொழுபோனதே தெரியவில்லை.

உரும்பராய் செல்லும் வழியில், தோலகட்டியில் இறங்கி ஆச்சிரமத்திற்கும் சென்றோம். அந்நேரம் அங்கு குருமார்கள் இருக்கவில்லை ஆச்சிரமத்தை சில நிமிடங்கள் சுற்றிப் பார்வையிட்டோம்.

> பத்திரிகையாளர் சுற்றுலா—4

பத்திரிகையாளர்கள் அங்கு பழரசங்களை வாங்கிக் கொண்டார்கள்.

பஸ் புறப்பட்டது. சிறிது தூரம் சென்றதும் ஒரு ஆசனம் காலியாக இருந்தது. பஸ்ஸை நிறுத்தச் சொன்னார்கள். எங்களுடன் வந்த நிருபர் ஒருவர் தூரத்தில், பழரசப் போத்தல்களுடன் வந்துகொண்டிருந்தார். போக்குவரத்து விதியானபடியால் 'றிவேர்ஸில்' போகமுடிவில்லை அவர் ஏறியதும் பஸ் புறப்பட்டது.

உரும்பராயை அடைந்தோம். 'அதோ சிவகுமாரன்' சிலை என ஒருவர் கூறியது தான் தாமதம். எல்லாரும் 'கமராக்களைத் தூக்கிக்கொண்டார்கள். பஸ் நின்றது. இறங்கிச் சிலைக்கருகில் சென்றோர்.

### தலைகீழாக சிவகுமாரன் சிலை

சிலை தலைகீழாக நின்றது. "கிளிக்" "கிளிக்" என பல கோணங்களில் படமெடுத்தனர். 'உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு' என்ற வாசகம் கல்லில் பொறிக்கப்பட்டிருந்தது. முத்துக் குமாரசாமி தலைமையில் காசி ஆனந்தன் திறந்து வைத்ததாகவும் பொறிக்கப்பட்டிருந்தது.

அவ்விடத்தில் கூட்டம் கூடிவிட்டது. இளைஞர்களும் நின்றார்கள். நிருபர்கள் சில இளைஞர்களை அணுகி அச்சிலையைப் பற்றி விபரம் கேட்டார்கள்.

### இராணுவத்தினர் உடைத்தனர்

நிருபர்; யார் இப்படித்தலைகீழாக உடைத்தது?

இளைஞர்: இராணு த்தினர் தான்.

நிருபர். எப்போது?

பதில்: கலவரத்திற்குப்பிறகு ஊரடங்குச் சட்டநேரத்தில் பெரிய 'ட்ரக்' கொண்டுவந்து கட்டி இழுத்துக் கவிழ்த்தார்கள்.

நிருபர்: இது யாருடைய இடம்?

பதில்; மக்களின் இடம்.

நிருபர்: மக்கள் அனுமதி பெற்றுத்தானே முதலில் சிலை அமைத்தார்கள்.

பதில்: ஆம்.

நிருபர்: மீண்டும் ஏன் சிலையைப் புதுப்பிக்கவில்லை?

பதில்: மீண்டும் புதுப்பித்தால், இராணுவத்தினர் மீண்டும் உடைப்பார்கள்.

நிருபர்: வெண்கலத்தினால் நிறுவினால் உடைக்க முடியாதே?

பதில்: வெண்கலத்தினாலென்ன தமிழ்ஈழம் கிடைத்த பின் தங்கத்தினாலே சிலை நிறுவுவோம்.

நிருபர்: சிவகுமாரன் யார்?

பதில்: அவர் ஒருலட்சியவாதி. இளைஞர் தலைவர் கொள்கை வீரர் தமிழ்இனத்தின் தியாகி.

நிருபர்: கொள்ளை, குற்றச் சம்பவங்களில் ஈடுபட்டவரா?

பதில்: அப்படி ஈடுபட்டதாக நீதிமன்றத்தில் நிருபிக்கப்படவுமில்லை, குற்றவாளியாக காணப்படவுமில்லை.

நிருபர்: சிலை இப்படித் தலைகீழாக இருப்பது இராணுவத்தினரின் கொடூரச் செயலை எடுத்துக்காட்டும் என்று நினைக்கிறீர்களா?

பதில்: அப்படியும் இருக்கலாம். தென்னிலங்கையிலிருந்து வந்திருக்கும் நீங்களும் இதன்மூலம் இராணுவத்தினர் பற்றி அறிந்திருப்பீர்கள். இச்சிலை புதுப்பிக்கப்பட்டிருந்தால் இராணுவத்தினரின் செயல் உங்களுக்குப் புரிந்திராது. இப்படியான செயல்களினால் தான் தமிழ் இளைஞரின் உணர்ச்சியை இராணுவத்தினரும் பொலிசாரும், வளர்க்கிறார்கள். இது தேவையற்ற ஒருசெயல். எங்கள் தலைவருக்கு எங்கள் ஊரில் சிலை நிறுவுவது தவறா? கொழும்பு பாராளுமன்றம் முன், சிங்களத்தலைவர்களான டி. எஸ் சேனநாயக்கா, அமரர் பண்டாரநாயக்காவிற்கு சிலைகள் நிறுவப்படவில்லையா? தமிழருக்கு சிலை

[5ம் பக்கம் பார்க்க]

---

## கொள்ளை இயக்கத்திற்கு அரசியல் வாதிகள் ஆதரவு:

# 'நான் அப்படிக் கூறவில்லை

## காங்கேசன்துறை எஸ். பி. மறுப்பு

(யாழ்ப்பாணம்)

ஈழநாடு "பத்திரிகையாளர் சுற்றுலா" கட்டுரையில் வடபகுதி கொள்ளை இயக்கத்திற்கு அரசியல் வாதிகளின் ஆதரவு இருக்கிறது. என்று வெளிவந்த செய்தியை காங்கேசன்துறை பொலிஸ் அதிபர் திரு. எம். ஈ. பி வியோ பெரேரா மறுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: வடபகுதி கொள்ளை இயக்கத்திற்கு அரசியல் வாதிகளின் ஆதரவு இருக்கிறது என்று நான் பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்த போது தெரிவித்ததாக வந்திருந்த செய்தி தவறானது அப்படி நான் பேட்டியளிக்கவில்லை.

அரசியல் வாதிகள் பற்றியோ அரசியல் பற்றியோ அப்போது கலந்துரையாடப்படவில்லை.

பத்திரிகையாளர் சந்திப்பு நடந்த தினத்தன்று மாலை நான் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. தம்பிமுத்துவை சந்தித்தேன் தான் பொலிஸாரால் தாக்கப்படவில்லை என அவர் தமது சொந்தக்கையெழுத்தில்வாக்கு மூலம் அளித்திருக்கிறார்.

பொலிஸாருக்கும் பொது மக்களுக்கு மிடையில் நல்லுறவை வளர்ப்பதற்காக புதுவருட கொண்டாட்டமொன்று எனது பிரிவில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

---

> மக்கள் கருத்து

### யாழ். விசேஷ ஆணையாளர் கவனிப்பாரா?

யாழ். மாநகரை அழகுபடுத்துவதற்கு விசேஷ ஆணையாளர் கவனத்திற்குச் சில கருத்துக்களைத் தருகின்றேன்.

பலகாலமாக யாழ். மாநகர சபையின் சுகாதாரப்பகுதிக்குப் பாஷையூர் பிரசவவிடுதியின் முன்னுலுள்ள விதியில் பாஷையூர்ப்பகுதியைச் சாராத தொழிலாளர்கள் இரவுத் தொழில் செய்தபின் பிரசவ விடுதியின் முன்னுள்ள 'லைட்' கட்டைகளின்கீழ் இருந்து ருல், மீன் போன்றவற்றைத் தெரிவு செய்தபின் மிகுதியான கழிவுப் பொருட்களை வீதியிலே அப்படியே விட்டுவிட்டுச் சென்றுவிடுகிறார்கள். காலையில் காய்ந்துபோகும் அவை துர்நாற்றத்தையும் வீசாதிருப்பதில்லை. இதனால் பிரசவவிடுதியில் வேதனையில் கஷ்டப்படும் பலர் துர்நாற்றத்தையும் சகிக்கமுடியாது கஷ்டப்படுகிறார்கள். இது பற்றி யாழ். மாநகரசபை சுகாதாரப்பகுதியினருக்கு அறிவிக்கப்பட்டபோது தொழிலாளர்கள் வந்து வீடு சென்ற பின்னர் பார்வையிடுவதற்காகமட்டும் வந்து செல்கின்றனர். ஆனால் காலை 6 மணிக்குப் பின் தொழிலாளர்கள் யாரும் இருப்பதில்லை. எனவே காலை 6 மணிக்கு முன் ஏதாவது நடவடிக்கை எடுத்து இப்படிப்பட்ட கழிவுப் பொருட்களை மின்சாரக் கட்டைகளின் கீழ் இருந்து மீன், ருல் போன்றவற்றைத் தெரிவு செய்வதை தடை செய்து பாஷையூர்ப் பகுதியின் அழகையும் சுகாதாரத்தையும் கெடுக்காது வளம்படுத்த உதவும்படி பாஷையூர் மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

தமது பதவிக்காலத்தில் விசேஷ கமிஷனர் இதனை நிறைவேற்றுவாரென எதிர்பார்க்கின்றேன்.


கே. பி. வின்சென்ற்.

யாழ். பல்கலைக்கழகம்.

---


Jem

ஜெம்



10,000 க்கு மேற்பட்ட "ஜெம்" மின்சார மோட்டர்கள் தற்பொழுது இலங்கையில் பாவிக்கப்படுகின்றன.

10,000க்கு மேற்பட்ட "ஜெம்" மின்சார மோட்டர்கள் உற்பத்தி செய்து விற்பனையாகி யுள்ளன. இதன் சிறப்புக்கு வேறென்ன அத்தாட்சி வேண்டும்?

முற்றிலும் மூடப்பட்டதும் விசிறியால் குளிரடைவதுமான இந்த மோட்டர், மேற்கு ஜேர்மன், E. BLUM KG தாபனத்தின் தொழில் நுட்பக் கட்டிணைப்புடன் தரமான உறுப்புக்களைக் கொண்டு, அரசாங்கத்தின் அங்கீகாரம் கொண்ட ஜினசேன இலெக்ட்ரிக் மோட்டர்ஸ் லிமிட்டெட்டால் உற்பத்தி செய்யப்பட்டவை.

"ஜெம்" மின்சார மோட்டர்கள் 1/4 எச். பி. முதல் 15 எச் பி வரையிலும், 950 ஆர். பி. எம். முதல்3000ஆர். பி. எம். வரையிலான வேகத்திலும் பல்வேறு ரகங்களில் உண்டு.

யாழ்ப்பாண மாவட்டம் முழுவதிலும், பின்வரும் எமது பிரதான விநியோகத்தர்களிடமும் கிடைக்கும்:

நியூடோன் இலெக்ட்ரிக்கல்ஸ்,
141, 143. ஸ்டேன்லி ரோட்
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7016.

ஜினசேன லிமிட்டெட்
இல. 4, ஹுணுப்பிட்டி ரோட்,
கொழும்பு 2. தொலைபேசி: 26558 - 9.

MelADS

# பூட்டோவின் மரணதண்டனை

## சட்டவிரோதமானது

### மேல் நீதிமன்றத்தில் அப்பீல்

கராச்சி, மார்ச் 28

பாகிஸ்தான் பிரதம மந்திரி ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோவுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது சட்ட விரோதமானது என்றும் மரணதண்டனையை ஒத்திவைக்கவேண்டும் என்றும் கோரும் மனு ஒன்றை ஜனாப் பூட்டோவின் வழக்கறிஞர்கள் இன்று மாகாண மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

பூட்டோவின் உயிரைக் காக்கும் இறுதி முயற்சி இதுவே ஆகும் என்று அவதானிகள் தெரிவித்தனர்.

இதே வேளையில் ராவல்பிண்டி சிறை அதிகாரிகள் இன்னமும் மரணதண்டனைக்கான தினத்தை ஜனாப் பூட்டோவுக்குத் தெரிவிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. [இ]

## சைனாயிலிருந்து இஸ்ரேல் துருப்புகள் விலகுகின்றன

### ஜெருசலத்தில் குண்டுவெடிப்பு

ஜெருஸலம் மார்ச், 28

1967-ம ஆண்டு போரில் கைப்பற்றிய அரபு மண்ணில் உள்ள சைனாய் பிரதேசத்திலிருந்து இஸ்ரேலிய துருப்புக்கள வெளியேறத்தொடங்கியுள்ளன என்று ஜெரூஸலத்திலிருந்து கிடைக்கப் பெற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளையில் எகிப்து-இஸ்ரேல் அமைதி ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் நேற்று ஜெரூஸலத்தில் இரண்டாவது தடவையாகக் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

டெல்அவிவ் விமான நிலையத்துக்கருகில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் 4 வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் உட்பட 15 பேர் காயமடைந்தனர்.

இஸ்தலத்திற்கு அருகேஇருந்து ஐந்து அரபுப் பிரஜைகள பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர். (இ)

### திறப்புவிழாவும் பரிசளிப்பும்

[யாழ்ப்பாணம்]

ஏழாலை மகாவித்தியாலயப் புதிய கட்டிடத் திறப்புவிழா இம்மாதம் 30ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது. தொடர்ந்து கல்லூரித் திறந்த வெளியரங்கில் பரிசளிப்புவிழா நடைபெறும்.

மானிப்பாய்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி, தர்மலிங்கம், வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர், மானிப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. தனஞ்சயன் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

திருமதி வி. தர்மலிங்கம் பரிசில்கள் வழங்குவார். [கொக்-வி]

## எண்ணெவிலை ஏப்ரல்முதல் 9 வீதம் அதிகரிக்கும்!

ஜெனிவா, மார்ச் 28

எண்ணெயின் விலையை 9 வீதம் அதிகரிப்பதென்று எண்ணெ உற்பத்தி ஏற்றுமதி நாடுகள் தீர்மானித்துள்ளன.

இந்த விலை அதிகரிப்பு அடுத்த மாதம் 1-ந் திகதி முதல் அமுலுக்கு வரும்.

ஜெனிவாவில் கூடிய 'ஒப்பெக்' ஸ்தாபன பிரதிநிதிகள் நேற்று மேற்கண்டவாறு தீர்மானித்தன.

இந்த விலை அதிகரிப்புடன் எண்ணெயின் விலை கடந்த ஆண்டை விட 40 வீதம் அதிகரித்துள்ளது

இந்த விலை அதிகரிப்பால் வளாமுள நாடுகள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் என உலகநாடுகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன. [இ]

### விக்ரோறியாவில் எல் எழில்விருந்து

[யாழ்ப்பாணம்]

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியத்தின் "எல் எழில விருந்து" இன்று மாலை கல்லூரி பிரதான மண்டபத்தில் பேராசிரியர் கலாநிதி ச. முத்துலிங்கம் தலைமையில் நடைபெறுகிறது. பேராசிரியர் கலாநிதி வி. தர்மரத்தினம் சிறப்பு விருந்தினராகக்கலந்து கொள்கிறார். [கு-இ]

### எம். ஜி. ஆர். அரசுக்கெதிராக ஊழல் புகார்

சென்னை, மார்ச் 28

தமிழ்நாடு அரசுக்கெதிராக லஞ்ச ஊழல் புகார் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருவதாக தி. மு. க. தலைவரும் தமிழக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவருமான திரு. மு. கருணாநிதி நிருபர்களிடம் தெரிவித்தார். [இ]

### ஆஸ்பத்திரியில் கிருபளானி

புதுடில்லி, மார்ச் 28

ஆச்சார்யா கிருபளானி சுகவீனம் காரணமாக அகமதாபாத்தில் உள்ள ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

அவருக்கு நரம்பு வழியாக உணவு செலுத்தப் படுகிறது. [இ]

## 24 மணித்தியாலத்திற்குள் படைகளைவெளியேற்றுவிடின் லிபியா தலையிடும்!

### தன்சானியாவுக்கு எச்சரிக்கை

தார்எஸ்ஸலாம், மார்ச் 28

உகண்டாவுக்குள் ஆக்கிரமிப்புச் செய்துவரும் தன்ஸானிய துருப்புக்கள் 24 மணித்தியாலத்திற்குள் உகண்டாவை விட்டு வெளியேறுவிடின் இவ்விவகாரத்தில் லிபியா தலையிடவேண்டி ஏற்படும் என்று லிபியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இத்தகவலை தன்ஸானிய ஜனாதிபதி தெரிவித்தார்.

எது எவ்வாறிருப்பினும் லிபியா எச்சரிக்கையை தாம் நிராகரிக்கப்போவதாகவும் தன்ஸானிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதே வேளையில் உகண்டாவில் புரட்சிப்படைகள் கைப்பற்றிய பிரதேசங்களில் உகண்டா தேசிய முன்னணி நிர்வாகத்தைக் கவனித்து வருவதாகஅறிவிக்கப்பட்டது. [இ]

### அமெரிக்காவுக்கு எதிராகவும்

## பொருளாதாரத்தடை விதிக்க வேண்டும்

### யாஸிர் அரபாத் வேண்டுகோள்

பக்தாத், மார்ச் 28

இஸ்ரேல் —எகிப்து அமைதி ஒப்பந்தம் கைச்சாத்தானதை அடுத்து எகிப்துக்கு எதிராக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக பக்தாத்தில் கூடிய அரபு நாடுகள் 4 மணித்தியாலங்களுள் மகாநாட்டை ஒத்திவைத்தன.

20 அரபு நாடுகள் இம்மகாநாட்டில் கலந்துகொண்டன.

எகிப்துக்கு எதிராக மட்டுமல்ல, அமெரிக்காவுக்கு எதிராகவும் அரபு நாடுகள் பொருளாதாரத் தடையை ஏற்படுத்தவேண்டும் என்று மகாநாட்டில் கலந்துகொண்ட பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜனாப் யாஸிர் அரபாத் அங்கு பேசுகையில் தெரிவித்தார். [இ]

CENTRIC

Robin

Sinha

Villiers

சென்ட்ரிக்
ஆயுள் காலம் பூராவும்
உழைக்கும் 2"
விவசாயப் பம்புகள்

உறுதிப்பாடுடைய சென்ட்ரிக் விவசாயப் பம்புகள் ஆண்டாண்டு காலம் உழைக்கின்றன. உங்கள் விருப்பத்திற்கு ஏற்றபடி, "ரொபின்", "சிங்க", "வில்லியர்ஸ்" ஆகிய எந்தவொரு இயந்திரத்துடனும் பூட்டி பவிக்கக்கூடிய பம்பு "சென்ட்ரிக்" மட்டுமே.



"சென்ட்ரிக்" பம்புகள் முற்றிலும் இரும்பினால் வார்க்கப்பட்டு உருவாக்கப் பட்டவை, ஆதலின் இவை காலத்தால் சிதைவுறாது உங்கள் ஆயுள் காலம் முழுவதும் உங்களுக்குத் தொல்லையில்லாத சேவை புரிகிறது,

1950ம் ஆண்டு முதல் இலங்கையில் பாவனையில் இருந்து வரும் "சென்ட்ரிக்", அதிசிறந்த பம்புகளில் ஒன்று என்பதற்கு இன்று உற்பத்தி செய்யப்படும் அநேக போலி பம்புகளே சான்று பகர்கின்றன.

உங்கள் நீர்ப்பாசனத் தேவைகளுக்கு நம்பிப் பாவியுங்கள் "சென்ட்ரிக்" பின்வரும் வியாபாரிகள் உட்பட யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல முன்னணி வர்த்தகர்களிடமும் கிடைக்கும்.

துர்க்கா ஆட்டோ ஹார்ட்வெயார் ஸ்டோர்ஸ்,
ஸ்டேன்லி றோட், யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7204

மொத்த விற்பனை விசாரணைக்கு பின்வரும் எமது யாழ்ப்பாணத்தின் பிரதான விநியோகத்தர்களுடன் தொடர்புகொள்க:

நியூ டோன் இலெக்ட்ரிக்கல்ஸ்,
141, 143, ஸ்டேன்லி வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி; 7016.

ஜினசேன லிமிட்டெட்
இல. 4, ஜாவத்தை ரோட்,
கொழும்பு 2, தொலைபேசி: 26558 - 9.

MelADS

RIO (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
ANIMAL
(Full length Comedy)
Family Entertainment

வெஸ்லி
(மாவிட்டபுரம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி - தேவிகா
வாழ்க்கைப் படகு

ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 10-30, 2-15, 6-15&9-45
ஜெய்சங்கர் - விஜயலக்ஷ்மி
உயிரா மானமா
(புத்தம்புதிய பிரதி)

மனோகரா
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-தேவிகா
இதயத்தில் நீ (புதிய பிரதி)
30-3-79 முதல் ராணிசம்புக்தா

13-வது வாரம்
வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 6-15 & 9-45
ஜெமினி - சாவித்திரி
நடித்த
கற்புக்கரசி
புத்தம்புதிய பிரதி

REGAL
(Jaffna)
3rd CROWDED WEEK
Daily 3 Shows
4-30,
7-00 & 9-30 p.m. only
JEAN PAUL - BELMONDO in
THE HUNTER (color)
(Spy film)
Next Attractino
THREE YELLOW CATS

தினசரி 4 காட்சிகள்
ராணி
(யாழ். நகர்)
சிவாஜி - பத்மினி
டி. ஆர். மகாலிங்கம்
ஸ்ரீ வள்ளி
(புதிய பிரதி—கலர்)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30&9-45
சனி, ஞாயிறு 10-30, 3-30
6-30 & 9-45
கல்யாணம் பண்ணிப்பார்
(புதிய பிரதி)

லிடோ
(யாழ். நகர்)
போன்: 7638
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
ஆசை அறுபதுநாள்

சாந்தி
போன்: 7642
யாழ்நகர்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45;
விநோத் கன்னா... கபீர் பேடி...
மௌசமி சட்டர்ஜி...
"கச்சே டாக்" — ஹிந்தி கலர்
Next: "GORA AUR GALA" Hindi Color

# சிவகுமாரன் ஒரு லட்சிய....

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

நிறுவும் உரிமைகூட இல்லையா? நாட்டின் சுதந்திரத்திற்கு போராடியவர்கள் பொன் இராமநாதன், சார். பொன். அருணாசலத்திற்கு கொழும்பில் சிலை நிறுவியிருக்கிறார்கள். தமிழர்களின் விடுதலைக்காகப் போராடிய சிவகுமாரனுக்கு இங்கு சிலை நிறுவுவதில் தவறென்ன?

நிருபர்: வேறு சிலைகளும் நிறுவப்பட்டுள்ளதா?

பதில்: ஆம், தமிழ் ஈழத்தை ஆண்ட தமிழ் மன்னன் சங்கிலியனுக்கு நல்லூரில் சிலை நிறுவப்பட்டுள்ளது யாழ். நகரத்தில் சோமசுந்தரப்புலவர், வள்ளுவர், ஔவையார், மகாத்மாகாந்தி, பாரதியார், அறிஞர் அண்ணா மற்றும் சமயத்தலைவர்களுக்கும் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன.

நிருபர்: இச்சிலைகள் நீக்கப் படவில்லையா?

பதில்: ஏன் இல்லை. கலவர காலத்தில் யாழ். நகரத்திலுள்ள பல சிலைகள் தாக்கப் பட்டன.

நிருபர்: அவைகளும், புதுப் பிக்கப்படவில்லையா;

பதில்; யாழ். மாநகரசபை ஆணையாளர் அவற்றைப் புதுப்பித்து அமைத்துள்ளார்.

நிருபர்: வேறு யார் சிலைகள் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டுள்ளன?

பதில்: மாநகரசபை வளவிற்குள் சேர் பொன் இராமநாதன் ஆனந்தகுமாரசாமி ஆகியோரின் சிலைகள் நிறுவப் பட்டுள்ளன, யாழ். மேயர் அல்பிரட் துரையப்பாவின் சிலையும் நிறுவப்பட்டுள்ளது.

நிருபர்: எப்போது அல்பிரட் சிலை நிறுவப்பட்டது?

பதில்: அவர் இறந்து ஒரு வருடத்தின்பின் அண்மையில் தமிழர் கூட்டணித் தலைவர்களில் ஒருவரான அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் சிலையும் நிறுவப்பட்டுள்ளது. இதுதவிர பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் பல இடங்களில் தமிழ்ப் பெரியார்களின் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன.

நிருபர்; இச் சிலைகளை யார் நிறுவினார்கள்?

## "தமிழ் ஈழம் மலர்ந்தபின் தங்கச்சிலை நிறுவுவோம்" — இளைஞர்கள்

### யு. என். பி. காலத்தில் உடைக்கப்பட்டன

பதில்: பொதுமக்களும் பொதுஸ்தாபனங்களும் என்று உங்களுக்கு சொல்லவேண்டும் யாழ். நகரிலுள்ள சிலைகள் யாவும் சுதந்திரக்கட்சி அரசாங்க காலத்தில் நிறுவப்பட்டன. அச்சிலைகள் உடைக்கப் பட்டது யூ. என். பி. ஆட்சி காலத்தில் தான்.

### சுதந்திரக்கட்சிக் காலத்தில்

நிருபர்: அமரர் செல்வாவின் நினைவுச்சின்னம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது.

பதில்: அதுவும் சுதந்திரக் கட்சிக் காலத்தில் தான் சிறிமா அரசாங்கமே அந்த இடத்தை ஒதுக்கிக் கொடுத்தது.

நிருபர்: யார் கட்டுகிறார்கள்?

பதில்: அதற்கென தந்தை செல்வா அறங்காவல் குழு உண்டு. அதன் செயலாளர் தான் திரு. சச்சிதானந்தன். பொதுமக்களிடம் நிதி சேர்த்துக் கட்டுகிறார்கள் இதுவரை ஒரு லட்சத்திற்கு மேல் செலவாகிவிட்டது; ஏப்ரல் மாதம் திறப்புவிழா.

நிருபர்: எவ்வளவு உயரம்?

பதில்: 80 அடி உயரம்.

நிருபர்: உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பலியான இளைஞர்களின் நினைவுச் சின்னம் எங்கேயிருக்கிறது?

பதில்: யாழ். முற்றவெளியில். அதுவும் சுதந்திரக்கட்சிக் காலத்தில், இளைஞர்களால் திடீரென நிறுவப்பட்டது. அதனையும் பலத்த சிரமப்பட்டு உடைத்துவிட்டார்கள். பின் அடுத்த வருடம் அதே இடத்தில் 9 நினைவுச் சின்னங்களை நிறுவினோம். அதன்பின் அவை சேதப்படுத்தப்படவில்லை. தினமும் மக்கள் மலர் வைத்து அஞ்சலி செலுத்திவருகிறார்கள்.

சந்திப்பு நடந்துகொண்டிருந்தபோது, தகவல் அதிகாரி நேரம் போய்விட்டது என அவசரப்படுத்தினார்; பஸ்ஸில் ஏறிக்கொண்டோம்.

## 3 மணி நேரமே மாணவர் நித்திரை செய்கின்றனர்

நண்பகல் போசனத்தின் பின் மணற்காடு, வல்லிபுரம் பகுதிகளுக்குச் செல்வதென திட்டமிருந்தது. ஆனால் நேரம் இல்லாததினால் போகவில்லை.

### கூட்டணி எம்.பி.க்கள் விருந்து

பஸ் யாழ்ப்பாணத்தை அடைந்தது அன்று இரவுப் போசன விருந்து வாடி வீட்டில் தமிழர் விடுதலைக்கூட்டணி எம்.பிக்கள் இந்த விருந்தை யளித்தார்கள்.

யாழ்ப்பாணம் எம்.பி திரு. வி.யோகேஸ்வரன் பருத்தித்துறை எம்.பி திரு.கே.துரைரத்தினம், மானிப்பாய் எம்.பி திரு. வி. தர்மலிங்கம், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோர் வந்திருந்தனர். பத்திரிகையாளர்கள் அவர்களுடன் கலந்துரையாடினார்கள். பத்திரிகையாளர்கள் திரும்பிச் செல்லுமுன் எப்படியும் எம். பிக்களுடன் ஒரு பொதுச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்படும்' என்று தகவல் அதிகாரி தெரிவித்திருந்தார்.

எம்.பிக்களுடன் தனித்தனிக் குழுவாகவே பத்திரிகையாளர்கள் சந்தித்தனர். தமிழ் ஈழத்தைப் பற்றிச் சில விளக்கங்களை அளித்தார்கள் எம். பிக்கள், அவ்வளவுதான் இராப்போசன விருந்து முடிந்து பத்திரிகையாளர் திரும்ப 10 மணிக்குமேலாகி விட்டது.

### அதிகாலை 4மணிக்கு நான் கண்டவை

25ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 4 மணிக்கே வீட்டிலிருந்து புறப்பட்டுவிட்டேன். தமிழ் மாணவர்கள் கஷ்டப்பட்டுப்படிக்கிறார்கள் எனமீனவர்கள் கூறியது உண்மைதான் என்பதை அப்போதே உணர்ந்து கொண்டேன். நான் சென்ற பஸ்ஸில் அதிகாலை 4 மணிக்கே மீசாலை சாவகச்சேரியிலிருந்து மாணவர்கள் டியுசன் வகுப்புக்கு யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்தார்கள் மாணவர்கள் மட்டுமல்ல மாணவிகளும் சிலர் அப்படியானால் அவர்கள் வீட்டில் 3 மணிக்கே எழுந்திருக்க வேண்டும் முதல் நாள் சுற்றுலா முடிந்து இரவு 10 மணி பஸ்ஸில் வீடுதிரும்பிக்கொண்டிருந்தேன். அந்த பஸ்ஸிலும் பல மாணவர்கள் டியூசன் வகுப்பு முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தார்கள் அவர்கள் வீடு சேருவதற்கு இரவு 12 மணியாவது சென்றிருக்கும் அப்படியானால் அவர்கள் நித்திரை செய்வது மூன்றேமூன்று மணி நேரம் தானே மிகுதி நேரம் எல்லாம் படிப்புக்குச் செலவிடுகிறார்கள் இப்படிப்படித்தும் பல்கலைக் கழகத்தில் இடம் கிடைக்காவிட்டால் விரக்தி ஏற்படாதா?

ஸ்ரான்லி வீதியிலுள்ள ஒருவிடுதியில் பத்திரிகையாளரில் ஒருபகுதியினர் தங்கியிருந்தனர் அங்கிருந்து அவர்களுடன் காலை 6-30 மணிக்குப் புறப்பட்டேன். பஸ் கச்சேரி நோக்கிச் சென்றது. சிங்கள மகாவித்தியாலயத்தைத் தாண்டிச் சென்றது.

வழியில், சிங்கள மகாவித்தியாலய ஆசிரியர்கள் பத்திரிகையாளர்களுக்கு வாழைப் பழச்சீப்புகள் கொடுத்தார்கள் அதில் ஒருவர் நீண்டதாடி வளர்த்திருந்தார். அவரை பார்த்தமுகமாக இருந்தது யோசித்துப்பார்த்தேன். அவரும். இனக்கலவரத்தில் தாக்கப்பட்டவர். சன்சோனிக்கமிஷன் முன் அவர் சாட்சியமளித்தபோது கண்டிருக்கிறேன். பெயர் குணவர்த்தனவாக இருக்கவேண்டும் சரியான ஞாபகமில்லை.

### அதிர்ச்சித் தகவல்

பஸ் அரசாங்க அதிபர் வாசஸ்தலத்தை அடைந்தது. அங்கு ஒரு அதிர்ச்சி தகவல் காத்திருந்தது.

அரசாங்க அதிபர் திரு, லைனல் பெர்னாண்டோவின் மாமியார் திருமதி அமரசிங்கா மரணமான தகவல்தான் அது.

அரசாங்க அதிபர் முதல் நாள் இரவே கொழும்பு சென்றுவிட்டார்.

இத்தகவலை தகவல் அதிகாரி திரு. விக்கிரமசிங்கா தெரிவித்தார். இந்தச் சுற்றுலாவை ஏற்பாடு செய்ததே அரசாங்க அதிபர்தான். பத்திரிகையாளர் எல்லோர் முகத்திலும் கவலையின் சாயல் படிந்திருந்தது.

அன்றிரவு கலாச்சாரப் பகுதியிலிருந்து விசேஷ நடனக் குழுவினர் அங்கு வரவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அங்குவந்திருந்த சில பத்திரிகையாளரும் பஸ்ஸில் ஏறிக் கொண்டனர்.

காலை 8--30 மணி. பஸ் கோண்டாவிலை நோக்கிப் புறப்பட்டது. கோண்டாவில் கணக்காளர் திரு. ஏ. ஏ. ரி. வடிவேலு தம்பதிகளின் விருந்தினர்களாகச் சென்றோம். அங்குதான் காலைச் சாப்பாடு. எங்களை அவர்கள் அன்புடன் வரவேற்று அழைத்துச் சென்றனர். சிரித்துப் பேசி கதைத்தனர். இட்லி, பிட்டு, இப்படிப் பலரக உணவுகள். சுவையான கறிகள், சட்னி...

காலை உணவை முடித்தபின், விருந்தையில் பத்திரிகையாளர் அமர்ந்து சிறிது ஓய்வு எடுத்தனர். சட்னியும், குழம்பும் சிலருக்கு வெறுவாகப் பிடித்துக்கொண்டதென்பதைப் பின்னர் அறிந்துகொண்டேன்.

விருந்தை சுவரில் ஒரு படம் மாட்டப்பட்டிருந்தது. அது விமான நிலையத்தில் எடுக்கப்பட்ட படம் அதில், அமரர் திருச்செல்வம் காணப்பட்டார். அமைச்சராக அவர் இருந்தபோது எடுத்திருக்க வேண்டும். அருகில் திரு. வடி

(6-ம் பக்கம் பார்க்க)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர். - ராதா சலுஜா
இதயக்கனி

# தமிழ்நாட்டில் நல்லாட்சி நடக்கிறது; கருணாநிதி எதிர்காலம் சாதகமாக இல்லை

## வைத்திய மாணவர் யாழ். ஆஸ்பத்திரியில் பயில வசதி

### ஆஸ்பத்திரிச்சபை முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியில் சரும நோய்ப்பிரிவில் முன்னர் கடமையாற்றி மாற்றலாகிச் சென்ற வைத்திய நிபுணர் வி. நடராஜாவின் இடத்துக்கு வேறொருவரையும் நியமிக்காததால் ஏற்பட்ட சிரமத்தை விளக்கி சுகாதார அமைச்சின் செயலாளருடன் பேச்சுவார்த்தை நடத்தியதால் கலாநிதி நடராஜாவை இரு வாரங்களுக்கு ஒருமுறை யாழ். ஆஸ்பத்திரியில் கடமையாற்ற அனுப்புவதென்று அமைச்சு தீர்மானித்துள்ளது.

இவ்வாறு யாழ். ஆஸ்பத்திரிச்சபையின் மாதாந்தக் கூட்டத்தில் சபையின் முயற்சிகள் பற்றி விளக்கக்கூறுகையில் தெரிவிக்கப்பட்டது.

சபைத்தலைவரும் முன்னாள் அரசாங்க அதிபருமான திரு. ஏ.ஏ. யோசேப்பு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சபைமேற்கொண்ட நடவடிக்கையின் முன்னேற்றம் பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

"யாழ். ஆஸ்பத்திரியை ஒரு சிறந்த மாகாண ஆஸ்பத்திரியாக்கவும் நோயாளிகளுக்குத்தகுந்த சிகிச்சையளிக்கவும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் படிப்பதற்கேற்ற வசதிகள் இவ்வாஸ்பத்திரியில் செய்து தரப்படவேண்டுமென்றும் சபையின் இரு பிரதிநிதிகள் திருவாளர்கள் ஏ. ஏ. யோசப்பு (தலைவர்) யோகேந்திரா துரைச்சாமி ஆகியோர் சுகாதார அமைச்சரையும் அமைச்சின் செயலாளரையும் சந்தித்ததன் பயனாக கொழும்பிலிருந்து வைத்தியகலாநிதி குணரட்ன ஆகியோர் ஆஸ்பத்திரிக்கு வந்து பரிசிலனை செய்தனர்.

"கொழும்பிலிருந்து வந்த இரு நிபுணர்களுடனும் பேச்சுவார்த்தை நடாத்திய சபை உறுப்பினர்கள் 1972-ம் ஆண்டில் சேவையிலிருந்த வைத்திய நிபுணர்கள் தற்போது இல்லை என்றும் இதனால் மாணவர்களுக்கு வகுப்புக்கள் நடத்த முடியாது எனவும் தெரிவித்தனர். யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி வித்தியானந்தனுடனும் இருநிபுணர்களும் பேச்சுவார்த்தை நடாத்தினர்

ஆஸ்பத்திரியின் சிகிச்சை நிலையங்கள் நல்ல நிலைக்குக் கொண்டு வரப்படவேண்டுமென்பதற்காக மின்சுவைற் உரிமையாளர் திரு. கனகராசா 5-ம் வார்ட்டையும் திருவாளர்கள் அன்ரனி சென் ஜோர்ஜ் (ஓட்டோ லிமிட்) கரன் என்ஜினியேர்ஸ் ஆகியோர் ஒன்று சேர்ந்து 17-ம் வார்ட்டையும் பரிபாலனம் செய்வதாகத் தமக்கு எழுதியுள்ளதாகவும் ஏற்கனவே ரேட்டரிகிளப் (பெண்கள் பிரிவு) குழந்தைகள் வார்ட்டைச் சிறந்த முறையில் பரிபாலித்து வருவதாகவும் புதிய தொலைபேசிச்சேவையைப் துரிதமாகச் செய்து முடிப்பதற்குப் பிராந்திய பொறியிலாளர் திரு. மகேந்திராசாவுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் 3 லட்சத்து 15 ஆயிரம் ரூபா ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உணவு தயாரிப்புக்கூடத்தைச்சபை அங்கத்தவர்கள் இருவர் நேரடிப் பரிசிலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி கேட்டபோது சபையில் பிரசன்னமாயிருந்த யாழ். மாநகர சபை விசேஷ ஆணையாளர் திரு. க. சிவஞானம் கழிவுப் பொருட்களை தினமும் அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

இக்கூட்டத்துக்கு சபையின் அங்கத்தவர்களும், பிராந்திய சுகாதார வைத்திய அதிபர், யாழ். ஆஸ்பத்திரி உயர் அதிகாரி, கட்டிடப் பகுதிச் சிரேஷ்ட பொறியியலாளர், பிராந்திய தொலைபேசி அதிகாரி ஆகியோரும் வந்திருந்தனர். (கு)

## புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர். நடிக்காததினால் திரையுலகமே இருண்டுவிட்டது!"

### யாழ். வந்த அ. தி. மு. க. அமைப்பாளர் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

"தமிழ்நாட்டில் முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன் பசுமைப்புரட்சி நடத்தி வருகின்றார். தமிழகத்தில் இதுவரை ஆட்சி நடத்திய காங்கிரஸும், தி. மு. கழகமும் செய்யாத புதுமைகளை முதல்வர் எம். ஜி. ஆர். இப்பொழுது சாதித்து வருகின்றார். அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டு" என்று அ. தி. மு. க. அமைப்பாளர் 'புரட்சித் தென்றல்' ஜஹுபர் சாதிக் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள 'புரட்சித் தென்றல்' எஸ். ஜே. சாதிக் எனும் ஜஹுபர் சாதிக் இரண்டுநாள் குறுகிய விஜயத்தை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார். திருவடானைத் தொகுதி சுந்தரபாண்டியன் பட்டணம், நகர அ. தி. மு. க. அமைப்பாளரான ஜஹுபர் சாதிக் 'ஈழநாடு' நிருபருக்கு நேற்று பேட்டி அளித்தார்.

#### எம். ஜி. ஆர். வாரிசு

"முதலமைச்சர் எம். ஜி. ஆரின் வாரிசு, நாஞ்சில் மனோகரன் அல்ல; நெடுஞ்செழியனே" என்று ஒரு தினசரிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கின்றீர்களே?" என்று கேட்டதற்கு "அது தவறான செய்தி! வேண்டுமென்றே திரித்துக் கூறப்பட்டுள்ளது. நான் அவ்விதமாகக் கூறவே இல்லை" என்று தெரிவித்த அவர்—

"முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரனின் வாரிசை



நிர்ணயிக்கும் தகுதி எனக்கோ அல்லது வேறு யாருக்குமோ கிடையாது. தலைவரிடம் மட்டுமே உள்ளது. முதல்வர் எம். ஜி. ஆர். தான் தனது வாரிசை நிர்ணயிக்கமுடியும்" என்று பதிலளித்தார்.

இப்பேட்டியில் 'புரட்சித் தென்றல்' ஜஹுபர் சாதிக் மேலும் தெரிவித்தாவது:

#### நல்லாட்சி நடக்கிறது

"தமிழ்நாட்டில் இப்பொழுது நல்லபடி ஆட்சி நடக்கிறது. முன்னைய ஆட்சியில் மலிந்து கிடந்த லஞ்சமும் ஊழலும் ஒழிக்கப்பட்டுவிட்டது. மக்கள் அங்கு நிம்மதியாக வாழுகின்றார்கள். மக்கள் மத்தியில் தலைவருக்கும், அ. தி. மு. க. ஆட்சிக்கும் நல்ல அபிப்பிராயம் உண்டு. தமிழ்நாட்டில் திரு. கருணாநிதிக்கு எதிர்காலம் சாதகமாக இல்லை. அவர் ஆட்சியில் மக்கள் அனுபவித்த சொல்லொணாத் துன்பங்கள், தொல்லைகளிலிருந்து இன்று மக்கள் நிம்மதியுடன் வாழ்கின்றார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மூடப்பட்ட ஆலைகள், எமது தலைவர் ஆட்சியில் திறக்கப்பட்டுள்ளன.

#### எம். ஜி. ஆரின் திரைவாழ்க்கை

"புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர். இப்பொழுது திரைப் படங்களில் நடிக்காததினால் தமிழ்த்திரைஉலகமே இருண்டு கிடக்கிறது! மக்கள் நலனுக்காக நடித்தவர் அவர். இன்று அவர் நடிக்கா விட்டாலும், இன்னும் சில மாதங்களில் அவர் நடித்தே ஆகவேண்டும். மக்களுக்காக அவா இப்பணியை மேற்கொள்ளவேண்டும்.

#### இலங்கை-இந்திய ஒப்பந்தம்

"இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை தி. மு. க. அரசு நல்லபடி அமுல் செய்யவில்லை. இலங்கையிலிருந்து தமிழகம் வந்தவர்கள் மிகுந்த கஷ்டம் அனுபவித்தனர், இன்றுஅந்த நிலை இல்லை அ. தி. மு. க. அரசு புதியதிட்டங்களை வகுத்துள்ளது. இலங்கையிலிருந்து அங்கு வருவோர் இப்பொழுது மகிழ்ச்சியாக இருக்கின்றனர். அவர்கள் வாழ்க்கை நல்லபடி அமைய, மத்திய அரசின் உதவியுடன், தமிழகஅரசு பெரும் உதவி, வேலைவாய்ப்புத் திட்டங்களை அமுல்நடத்தி வருகிறது" என்று புரட்சித்தென்றல் ஜஹுபர் தெரிவித்தார்.

—கே. ஜி. எம்.

## பொலிஸ் - பொதுமக்கள் நல்லுறவை ஏற்படுத்த காங்கேசன் எஸ்.பி. முயற்சி

### புதுவருட தினத்தில் விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

பொலிசாருக்கும் பொதுமக்களுக்கும் நல்லுறவை ஏற்படுத்துவதற்காகக் காங்கேசன் துறைப் பொலிஸ்அதிபர் திரு. லியோ பெரேரா பிரிவுக்குள் புதுவருடத்தையொட்டி விளையாட்டுப்போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஏப்ரல் 15ம் தேதி காங்கேசன்துறையில் நடைபெறவிருக்கும் இப்போட்டிகளின் பரிசளிப்பு விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் பிரதம விருந்தினராக அழைக்கப்படவிருக்கிறார்.

காங்கேசன்துறை பொலிஸ் அதிபர் பிரிவில் அடங்கிய சங்கானை, சுன்னாகம், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, காங்கேசன்துறை (தலைமைக் காரியாலயம்) பகுதிகளில்விளையாட்டு போட்டிகள் நடைபெறும்.

ஒவ்வொரு பொலிஸ்பிரிவிலுமிருந்து 5ஆண்களும், 5பெண்களும், 2 கைப்பந்தாட்ட கோஷ்டியும் தெரிவு செய்யப்பட்டு, 15ம் தேதி காங்கேசன் துறையில் நடைபெறும் இறுதிப்போட்டிக்கு அனுப்பப்படுவார்கள்.

கைப்பந்தாட்ட போட்டியும் சைக்கிளோட்டப் போட்டிகளும் இடம்பெறும். சைக்கிளோட்டப்போட்டி, இப்பிரிவுக்கு கிழுள்ளபொலிஸ்நிலைய பகுதிகளில் இடம்பெறும்.

புதுவருட விளையாட்டுப் போட்டிக்கான ஏற்பாட்டை காங்கேசன்துறை தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எம். ஈ. குரூஸ் செய்து வருகின்றார். (ச)

## சிவகுமாரன்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலுவும் நின்றார்.

'மற்றப் பக்கத்தில் நிற்பது யார்?' என அந்த நிருபர் கேட்டார்.

அவர்தான் முன்னாள் நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதன் என்றேன்.

'இரும்பு மனிதர் நாகநாதனு' என்றுகேட்டார். ஆம் என்றேன்.

அங்கிருந்து 9-30 மணிக்குப் புறப்பட்டோம். நிலாவரை நோக்கி சென்று கொண்டிருந்தோம். (வளரும்)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் சம்பந்தமான வியாபாரிகளுக்கான ஒரு கருத்தரங்கு திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் ஏப்ரல்மாதம் முதலாம்திகதி காலை நடைபெறும்.

நிறுவைகளும் அளவைகளும் ஏப்ரல்மாதம் 3ம் திகதிக்கு முன்னதாக கச்சேரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு 'சீல்' வைக்கப்பட வேண்டுமென்று உணவுக்கட்டுப்பாட்டு இலாகா அறிவித்துள்ளது.

## இன்றைய திருவிழா

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமிகோவில் மகோற்சவம் ஏழாம் திருவிழாவாகிய இன்று வள்ளி தேவயானை சமேதராக முருகப்பெருமான் காலை 9 மணிக்கு பூஜையாகி மஞ்சத்தில் உள்வீதிவலம் வந்தும், மாலை 6-30 மணிக்கு பூஜையாகி மயில்வாகனத்தில் எழுந்தருளி வெளிவீதி வலம் வந்தும் காட்சி கொடுத்தருளுவார்.

## மாணவர் சுற்றுலா

[யாழ்ப்பாணம்]

இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்தைச் சேர்ந்த சுமார் 160 மாணவ மாணவிகள் நேற்று கல்விச்சுற்றுலா சென்றனர்.

பலாலி விமான நிலையம், அச்சுவேலி தொழில்பேட்டை, திருநெல்வேலி கமநல பயிற்சி நிலையம், காரைநகர் ஈ-நோரீ, கடல்கோட்டை என்பனவற்றை இவர்கள் சென்றுபார்வையிட்டனர். அதிபர் திரு சு. செல்லத்துரை தலைமையில் 10 ஆசிரியர்களுடன் வந்த இம்மாணவர்கள் 'ஈழநாடு' அலுவலகத்துக்கும் வந்திருந்தனர். (கு)


## ஏலவிற்பனை அறிவித்தல்

வெற்றுத்தார்ப்பீப்பாக்கள், பழைய பித்தளைக் கம்பிகள், ஜி. ஐ. வயர்கள், பழையமண்வெட்டிகள், ரயர்கள், பற்றறிகள், சிமெந்துப் பக்கற்றுக்கள் முதலியன 30-3-79ஆம் திகதி காலை 9-00 மணிக்கு மாநகர சபை களஞ்சியத்தில் விற்கப்படும். கூடிய கேள்விக்காரர்கள் உடனடியாகப் பணத்தைச் செலுத்திப்பொருட்களை எடுத்துச் செல்லவேண்டும்.

க. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபைஅலுவலகம்,
யாழ்ப்பாணம்,
28-3-79. 2028


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மார்ச் மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the Geneial Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu; Telephone: 389.